னுக்காக" "பெண்டிங்காக" இருக்கிறது. நம்மியந்தலில் ஏற்கனவே இரண்டு கிணறுகள் இருக்கின்றன. இன்னொரு கிணறு வெட்டுவதற்கு எஸ்டிமேட் தயாராகி இருக்கிறது. டெக்னிகல் சாங்ஷன் கிடைத்ததும் அந்த வேலையும் எடுத்துக்கொள்ளப்படும்.

Minor irrigation schemes

*435 *Q*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோயம்புத்தூர் ஜில்லா, பவானி தாலூகாவிலே, 1958–1959-ம் வருடங்களிலே பரிசீலனை ((investigation)) செய்யப்பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களிலே எந்தெந்த திட்டங்கள் 1960-ம் வருடத்தில் செய்து முடிக்கப்படும்.

THE HON SRI M. BHAKTAVATSALAM: Five schemes have been investigated but none of them is expected to be executed and completed in 1960.

SRI P. G. MANICKAM: பவானி தாலூகாவிலே ஏறக்குறைய 7 திட்டங்கள் சர்க்காராலே பரிசீலனை செய்யப்பட்டு எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. சுமார் ரூ. 7,78,800 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக தொகை தேவை என்றும், சுமார் 2,000 ஏக்கர்களுக்கு பாயும் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களிலே 1960–61-ல் ஏதாவது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முதலில் கேட்கப்பட்ட கேள்வி 1958–59-ம் வருடங்களிலே பரிசீலனை செய்யப்பட்ட திட்டங்களிலே எந்தெந்த திட்டம் 1960-ம் வருடத்தில் செய்து முடிக்கப்படும் என்பது. அதற்குத் தான் பதில் அளித்தேன் ஐந்து திட்டங்கள் என்று. ஆனால் இந்த ஐந்து திட்டங்களும் 1960-க்குள்ளேயே முடியும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. மற்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

SRI P. G. MANICKAM: இந்த ஐந்து திட்டங்கள் எவை எவையென்று அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான்கு திட்டங்கள் எவை என்று நான் சொல்லக்கூடும்.

(i) Harnessing-Kavandapady-Pallam drain in S. No. 894 of Salangapalayam of Bhavani taluk.

(ii) Harnessing the Kavandapady-Pallam drain in S. No. 341 of Salangapalayam village of Bhavani taluk.

(iii) Harnessing the drainage course in S. No. 696 of Periapuliyur village of Bhavani taluk.

(iv) Harnessing the Thayirpalayam drain in S. No. 524 of Periapuliyur village of Bhavani taluk.

மற்றபடி இப்பொழுது பரிசீலனை செய்யப்படுவதெல்லாம் குட்டைகளை சரிப்படுத்துவதுதான்.